DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No. 76/2024

PROSECUTION WITNESS No - PW-4

Name : மாணிக்கம் Caste:

Father Name Calling:

Village: Religion:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of February 2026.

1 வது மற்றும் 2 வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது காரைக்குடி உட்கோட்டத்தை சார்ந்த சோமநாதபுரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2022 ம் ஆண்டில் உலகம்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வளராக பணியாற்றிய போது கடந்த 23.02.2022 ம் தேதி இரவு 21.00 மணியளவில் நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது ரோந்து பணிக்கு சென்ற சிறப்பு சார்பு ஆய்வாளர் சேதுராமன் தலைமைக்காவலர் சரவணன் முதல்நிலை காவலர் பிரபாகரன் ஆகியோர் நிலையம் வந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் சேதுராமன் என்பவர் எழுத்து மூலமாக கொடுத்த புகாரைப்பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 6/2022 இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act படி முதல் தகவல் அறிக்கை தாயரித்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தயாரித்த முதல் தகவல் அறிக்கையை உடனடியாக உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வழக்கு கோப்பை நிலைய காவல் ஆய்வளரின் பார்வைக்கு வைத்தேன். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

சம்பவ தினத்தன்று சார்பு ஆய்வாளர் புகார் கொடுத்த போது எதிரிகள் யாரும் நிலையத்தில் ஆஜர் ஆகியிருந்தார்களா என்றால் இல்லை. புகாரில் எதிரிகளின் பெயர் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். காவல் நிலையத்திற்கு புகாருடன் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் வாகனத்தை யார் மூலமாக கொண்டு வரப்பட்டது என்ற விவரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கில் ஆய்வாளர் புள்ளி விவர நோக்கில் தயாரித்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையில் கையொப்பம் இட்டு அதற்கு ஏதுவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளின் பெயர் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.02.18 17:39:41 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை